1994 ஏப்ரல் 5]

யின்மை ஏற்பட்டு அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குப் புனர் வாழ்வு அளிக்க வேண்டி அவர்களுக்கு என்று ஒரு நலத் திட்டம் தொழிலாளர் ஆணையர் மூலம் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 193, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

193--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்ட படித்த இளைஞர்களுக்கு நரிமணம் ஓ.என்.ஜி.சி.-யில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளித்தல்

*19465-திரு. எம். **பூராசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் படித்துவிட்டு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் அந்த மாவட்ட இளைஞர்களுக்கு நரிமணம் ஓ.என்.ஜி.சி.--யில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை தர மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது நடைமுறையில் உள்ள மைய அரசின் ஆணைகளின்படி Union Public Service Commission போன்ற அமைப்புகள் மூலமாக நிரப்பப்படாத காலியிடங்களை மைய அரசு நிறுவனங்கள் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குத் தெரிவித்து அவற்றின் மூலம் நிரப்புதல் வேண்டும். இந்த நடைமுறையை ஓ.என்.ஜி.சி. நிறுவனம் பின்பற்றவில்லை என்பதாகவோ அல்லது நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கும் மனுதாரர்களை நியமனம் செய்யாமல், வேறு மாவட்டத்தில் பதிவு செய்துள்ள மனுதாரர்களை ஓ.என்.ஜி.சி. நிறுவனம் நியமனம் செய்ததாக புகார் எதுவும் இதுவரை அரசின் கவனத்திற்கு வரவில்லை. அவ்வாறு கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் மைய அரசுக்கு எழுதுவது பற்றி புரட்சித் தலைவி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். பூராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் படித்த வேலையில்லாத பட்டதாரிகள் ஆயிரம் பேர்கள் அங்கே பதிவு செய்திருக்கிறார்கள். ஆகவே மைய அரசை, நமது டாக்டர் புரட்சித் தலைவி அரசு வற்புறுத்தி, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு, வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பிரிக்கப்படுவதற்கு முன்பாக ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தில் ஏற்பட்ட மொத்தம் 70 காலி இடங்களை நிரப்புவதற்கு தஞ்சை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து 272 மனுதாரர்கள் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன. 1991-ல் காயிதே மில்லத் மாவட்டம் உருவான பிறகு நாகப்பட்டினம் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம், ஓ.என்.ஜி.சி. நிறுவனத்திற்கு 13 காலியிடங்களை நிரப்பும் பொருட்டு 93 மனுதாரர்கள் பரிந்துரை செய்யப்பட்டனர். சில காலி இடங்களுக்கு தகுதியுள்ள மனுதாரர் இல்லாத நிலையில், பக்கத்தில் உள்ள மாவட்டத்தில் உள்ள மனுதாரர்கள் வேலைவாய்ப்பு மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 194, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

*194--*

**கூட்டுறவு நியாய விலைக் கடைப் பணியாளர்களை நியமிக்க தனி தேர்வாணையம் அமைத்தல்**

***23283-திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்குப் பணியாளர்களை நியமிக்க தனித்தேர்வாணையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?